[18th March 1961

SRI N. R. THIAGARAJAN : தேனி மக்களுடைய நெடுநாள் குறையைப் போக்கும் வகையில், இந்த ரூட்டில் பஸ் விடுவதை எக்ஸாமின் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்படிருக்கிறது. ஆனால் பஸ்கள் விட்டிருப்பதற்கு தேனி மக்களுடைய சார்பிலே எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பத்திற்கும் பஸ் விடப்பட்டு ஸ்டே செய்யப்பட்டிருக்கிறது. அதையும் சீக்கிரமாக விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போட்டிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடமுடியுமா ?

MR. SPEAKER : It is not a question requiring an answer, but only a suggestion for action.

Kundah Project (Canadian aid)

*902 *Q.*—SRI A. VEDARATHANAM : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குந்தா திட்டத்தின் 3-வது கட்டத்தைப் பரிசீலித்து உதவ கனடாவிலிருந்து வந்த மூவர் கமிட்டி செய்த முடிவு இச்சபைக்கு அறிவிக்கப்படுமா?

(இ) இந்த 3-வது கட்டத்திற்கு கனடாவிலிருந்து நம் சர்க்கார் எதிர்ப்பார்க்கும் உதவி என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No decision as such were taken by the team of Canadian Engineers in regard to the question of Canadian assistance for the Third stage Extension of the Kundah Hydro-Electric Scheme. They held only a series of discussions with the officers of the Madras State Electricity Board and the Government of India in regard to the design and specifications for the various equipment required and visited the various sites of the Kundah III Stage. At the discussions, the draft of an agreement to be entered into between the Government of Canada and India, in the event of the Government of Canada agreeing to participate in the Third Stage Extensions, was also considered. While inaugurating the III Stage Extensions on 18th January 1961 the Canadian Minister for Veterans Affairs announced that the Government of Canada had agreed to participate in this extension also.

(*b*) Assistance in terms of essential equipment and services representing foreign exchange costs is expected.

SRI A. VEDARATHNAM: இந்தக் கமிட்டி இந்த விஷயங்களை ஆலோசிப்பதற்காகக் கூடியபொழுது, அது ஒரு முடிவுக்கும் வராமல் விஷயங்களை மாத்திரம் பேசி நிறுத்திவிட்டதின் காரணமாக, மூன்றுவது கட்டத்தில் அவர்கள் நமக்கு அளிக்க வேண்டிய உதவியைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டுமே. அதைப் பற்றி விவரம் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH: இந்த நிபுணர்கள் கமிட்டிக் கூடிப் பேசிய பிறகு, அதைப் பரிசீலனை செய்து, அவர்களுடைய சிபார்சை நல்ல மனதோடு கனடா அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, மூன்றுவது கட்டத்திற்கு உதவி செய்வதாக ஒரு முடிவை கனடா அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று என்னுடைய பதிலிலேயே சொன்னேன், கனடாவிலிருந்து இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இங்கே வந்திருந்த அவர்களுடைய நாட்டு மந்திரி, இந்தத் திட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ளப் போகிறோம் என்ற முடிவைத் தெரிவித்தார்கள். ஆகையால் எல்லாம் நல்ல விதமாக முடிந்திருக்கிறது.

SRI A. VEDARATHNAM : மூன்றுவது கட்டத்திற்கு அவர்களிடமிருந்து என்னென்ன உதவி கிடைக்கும் ? என்னென்ன உதவிகள் அளிக்கப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : அதற்கு வேண்டிய மெஷினரி, மற்றும் நிபுணர்களுடைய உதவி எல்லாம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.